# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.116 /2023 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner<br>Respondent | அ.சா.1 |
| Name : | | திருமதி.விஜயலெட்சுமி |
| Father's/Husband Name: | | திரு.கணேசன் |
| Village : | | மருதடி |
| Taluk : | | ஆலத்தூர் |
| Age : | | 43 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.10.2023

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**மனுவில் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை அனுமதிக்கப்படுகிறது :-**

**1 ,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

**01.** ஆஜர் எதிரிகளின் மகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர் மைனர் என்றால் சரிதான். என் மகன் பெயர் ராகவன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் மைனர் மகளை 10 வது படிக்கும் போது என் மகன் காதலித்தாரா என்றால் இல்லை. அந்த பெண் என் மகனுக்கு என்ன மெசேஜ் அனுப்பினார் என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன்.

02. மெசேஜ் வந்த செல்போனை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. என் மகனை சிறையில் வைத்திருந்த போது செல்போனை வாங்கிகொண்டார்கள். ஆஜர் எதிரிகளின் மைனர் மகள் 6 மாத கர்ப்பமாக இருந்து அதற்கு என் மகன் தான் காரணம் என்று சொல்லி சிறைக்கு அனுப்பினார்கள் என்றால் என்னை அடித்தற்காக என் பையனை கைது செய்தார்கள். என் மகன் சிறையில் இருந்த போது ஆஜர் எதிரிகளின் மைனர்

மகளுக்கும் என் மகனுக்கும் மருத்துவ பரிசோதனை செய்தார்கள் என்றால் சரிதான்.

03. மருத்துவ பரிசோதனையில் உண்மை என்று தெரியவந்ததால் தான் போலீசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு Spl.S.C.No.64/2023 என்று கோப்பில் மகிளா நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. என் மகன் இப்போது ஊரில் இல்லை என்றால் சரிதான். மகிளா நீதிமன்றத்தில் சம்மனை போலீசார் எடுத்து வந்ததால் என் மகன் தலைமறைவு ஆகிவிட்டார் என்றால் 22 நாட்களாக என் மகன் வீட்டிற்கு வரவில்லை. என் காணமால் போய்விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் வழக்கறிஞரிடம் தான் சொன்னேன்.

04. என் மகன் திருமணம் ஆன பெண்ணுடன் சென்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. என் மகன் ஆடு, மாடு திருடிய வழக்கில் சம்மந்தப்பட்டவர் என்றால் என் கணவர் தான் அந்த வழக்கில் சம்மந்தப்பட்டவர். அதனால் போலீசார் எங்களுக்கு நன்றாக பழக்கம். போக்சோ வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் வீட்டிற்கு மைனர் பெண் சம்மந்தமாக கேட்பதற்காக நான் என் கொழுந்தனார் ரெங்கராஜ் என்பவரை அழைத்து சென்றேனா என்றால் அவர் என்னுடன் வரவில்லை.

05. நான் என் மூன்று மகன்களை அழைத்து சென்றேன். நாங்கள் அங்கு சென்ற போது அந்த பெண் 6 மாதம் கர்ப்பமாக இருந்ததால் அதை கலைப்பதற்காக அழைத்த போது வரவில்லை என்பதால் நாங்கள் தான் எதிரிகளை அடித்துவிட்டோம் என்றால் இல்லை. அவர்கள் தான் எங்களை அடித்தார்கள். நாங்கள் தாக்கியதால் 2ம் எதிரிக்கு கையிலும், காலிலும் காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டது என்றால் சாட்சி முதலில் சரி என்று சொல்லிவிட்டு பிறகு இல்லை என்று சொல்லுகிறார்.

06. மைனர் பெண் என்று தெரிந்தும் வீட்டிற்கு சென்று வலுகட்டாயமாக வம்பு இழுத்து அடித்தோம் என்றால் சரியல்ல. மைனர் பெண்ணையும் நாங்கள்

அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. என் மகன் செய்த தவறை மறைப்பதற்காக எதிரிகள் மீது பொய்யான புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல.